## போரழிவு என்ற செயற்கைச் சுனாமிகள் பல கண்ட
## எமக்கு மற்றோர் அழிவைத் தந்த ஆழிப்பேரலை.

மனவெளியில் தொடராய் அலைமோதிய வினாவிது? இக்கட்டுரையை எழுதுவதா? விடுவதா? பல தடவைகள் யோசித்தபின் இதை எழுத ஆரம்பிக்கின்றேன்.

ஆற்றுப்படுத்தல் (Counciling) என்ற பதம் சமகாலத்தில் பத்திரிகைகளில் வரும் ஒரு தலைப்பு. அதாவது கொடூரக் காட்சிகளைக் கண்டும் உடன் பிறப்புக்களை கொடிய நிகழ்வுகளில் இழந்தும், பிள்ளைகளைக் கட்டியணைத்தபடி உயிர் துறந்த பெற்றோர்களின் நெஞ்சுருகும் நிலைகண்டும் … என நீண்டு கொண்டே போகும் துன்பத்தின் எல்லைக்குச் சென்றுவிட்ட எம் மக்களை இச் சிறிய கட்டுரை மேலும் அல்லலுறச் செய்யாது என்ற நம்பிக்கையிலேயே இதனை ஆரம்பிக்கின்றேன்.

**இழப்புக்களை அதிகரித்த சுனாமி கடல் அனர்த்தம்**

சுனாமியின் போது நடந்த நிகழ்வுகள் உயிர் தப்பிய ஒவ்வொருவருக்கும் ஒரு சரித்திரம், வரலாறு, மறுபிறப்பு. இப்பொழுது நாம் தென்னிலங்கை முதல் வட இலங்கை வரை கண்டும், கேட்டும், அனுபவித்துவரும் நிஜங்கள். போர்க்காலச் சூழலில் வாழ்ந்தோரிற்கும் அதன் கொடுமைகளிற்கும் முகம் கொடுத்தோரிற்கும் ஒன்றும் புதிதல்ல என்பதே இங்கே மனம் கொள்ளப்பட வேண்டியதாகும். உண்மையில் போர்க்காலச் சூழலில் உயிர் உடைமைகளை இழந்த மக்களின் இறப்புக்களை அண்மைய நிகழ்வு மேலும் அதிகரித்துள்ளது.

உதாரணத்திற்கு சிறுவர்களிற்கு வெள்ளை என்றால் பால் என்போம். நீலம் என்றால் வானம் என்கிறோம். இறைவன் என்றால் ஆலயம் என்கிறோம். இவை அவர்களின் மனங்களில் பதிந்துள்ளது போன்று யுத்தத்தில் தம் இரத்த உறவுகளைத் துடிக்க துடிக்க இழந்தவர்களுக்கும், சிறுகச் சிறுகச் சேமித்த தம் உடமைகள் கணப்பொழுதில் இடம்தெரியாது போன காட்சிகளைக் கண்டவர்களுக்கும், அந்தப் பீதி சமாதான உடன்படிக்கையின் மூன்றாவது ஆண்டிலும் அகலாமல் பசுமரத்தாணி போல் பதிந்துள்ளது என்பதே நிதர்சனம். இதற்கு குமுதினி படுகொலையைச் சொல்லவா? நாகர் கோயில் பாடசாலை மீது குண்டுவீசி பச்சிளங்குழந்தைகளின் உயிர்துடித்ததை சொல்லவா? வல்வைப் படுகொலைகளைச் சொல்வதா? என நீளும் பட்டியல்.

பிணக்குவியல் வடபகுதிக்கு ஒன்றும் புதிதல்ல. தரைமட்டமாக்கப்பட்ட கட்டடங்கள் ஒன்றும் விசித்திரமல்ல. கடற்றொழிலாளரின் படகுகளும், உபகரணங்களும் எரித்து நாசமாக்கப்பட்டவை ஏனையோர் அறியாததல்ல. இருந்த வடுவே இல்லாது அழித்தொழிக்கப்பட்ட ஆலயங்கள், வீடுகள், கிராமங்கள் வடக்கிற்கு புதிய பதிவேடுகள் அல்ல.

திட்டமிட்ட பேரழிவு

ஆளும் வர்க்கத்தினாலும் ஆக்கிரமிப்புக்காரர்களாலும் செயற்கையாக வேண்டுமென்றே திட்டமிட்டுச் செய்யப்பட்ட பேரழிவுகளை, குறிப்பாக வடமராட்சி மகடகளட 1987 ஒபரேஷன் லிபரேஷன் காலத்திற்கு முன்பிருந்தே அனுபவித்து வருகின்றனர். ஒருதடவையா.. இரு தடவையா.. பல தடவையா என எண்ணும் தரமற்ற பல காலகட்டங்களில் சொந்த மண்ணை விட்டு வெளியேறி, உறவுகளைப் பிரிந்து வாழ்ந்த காலங்கள் பல. இது எம் வாழ்க்கையில் காலங்காலமான (அன்றாட) நிகழ்வுகள் ஆகிவிட்டன.

இங்கே பெரிய சத்தம் கேட்டுவிட்டால் அங்கே “கிபீர் ” வந்துவிட்டது. சகடை குண்டு போடுகிறது பலாலியில் இருந்து ஷெல் கிளம்பிவிட்டது என்று கூறித்தான் எம்மக்களிற்குப் பழக்கம்.

வல்வை ஆதிகோவிலடியை சொந்த மண்ணாக கொண்ட கட்டுரையாளர் தனது எண்ணக் குமுறல்களையும் சிந்தனைகளையும் வாசகர்களுட் பகிர்ந்து கொள்கிறார்.

கடற்பக்கமாக சத்தம் கேட்டால் அதோ நேவி அடிக்கிறான்: கரைக்கு வந்துவிட்டான் ஆமியை இறக்குகிறான்’ என்பார்கள், பதற்றத்துடன் கையில் அகப்பட்டதை எடுத்துக்கொண்டு ஓடுவார்கள்.

இது வடபகுதி முதல் முல்லைத்தீவு, திருமலை ஈறாக கரையோரப் பகுதிகளில் வாழும் தமிழ் மக்கள் பட்டு அனுபவித்த துயர துன்பங்கள், அடிமனதில் ஆழப்பதிந்த வடுக்கள்.

எதிர்பாராத போரழிவு

26.12.2004 இல் ஏற்பட்ட கடற்கோள் சுனாமியினால் இழப்புக்கள் பல மடங்காகின. வல்வை ஆதிகோவிலடியிலிருந்து முல்லை மாவட்டம் வரை நேரடியாகப் பாதிக்கப்பட்ட சகல மக்களினதும் கலந்துரையாடலின் ஊடாகவும், அவர்கள் கூறிய கதைகளிலிருந்து கீழ்வருவனவற்றை நாம் அறியமுடிகின்றது.

கடற்பக்கத்திலிருந்து பாரிய வெடிச் சத்தங்கள் கேட்டதும் கடல் சண்டை நடக்குது. இனி கரைக்கும் ஷெல் அடிப்பாங்கள். பொம்பரும் வரும். எல்லாரும் விழுந்து படுங்கோ. இவ்வாறு கடற்கரையில் படுத்து கடலால் காவு கொள்ளளப்பட்டோர் பலர்.

பாரிய சத்தம் கேட்டமையால் பிள்ளைகளைக் கொண்டு ஓடமுடியாத பெற்றோர் கதவுகளை இறுகப்பூட்டி வீட்டினுள் இருந்து உயிர்பிரிந்தோர் சிலர்.

பரவலாகக் கேட்ட சத்தத்தினால் ஆமி புகுந்துவிட்டான் என எண்ணி கடற்பக்கம் ஓடிச்சென்று பலியானோர் பலர்.

மணற்காடு போன்ற பிரதேசங்களில் அமைக்கப்பிட்டிருந்த இராணுவத்தின் முட்கம்பி வேலியினால் அக்காவலரணுக்குள் சிக்குண்டு தம்மை மீட்டுக்கொள்ள முடியாது இறந்தவர்கள் ஏராளம். இதில் தம் கூந்தல் சிக்குண்டு மீளமுடியாது இறந்த பெண்கள் ஏராளம்.

தேசியத் தலைவர் 17.01.2005 இல் புத்திஜீவிகளுடனான ஆலோசனைக் கூட்டத்தில் கூறியது போல, கடந்த காலத்தில் சிறிலங்கா அரச படைகளின் நடவடிக்கைகளால் எமது மக்கள் சொந்தங்களையும், சொத்துக்களையும் இழந்தும் இடம்பெயர்ந்தும் விசேடமாக சில கிராமங்களே தரைமட்டமாக்கப்பட்டவை( உதாரணமாக 1987இல் வல்வை ஆதிகோவிலடிக் கிராமம் தரைமட்டமாக்கப்பட்டமை) இப்போதைய இயற்கை அனர்த்தத்தைவிட மோசமானது. இவை யாவும் ஏனைய நாடுகளோ அன்றி தென்னிலங்கை மக்களோ அறியாமல் மூடிமறைக்கப்பட்டன.

நமது நாட்டைப் பொறுத்தவரை வடபகுதி சிறியதும் பெரியதுமான பல செயற்கைச் சுனாமிகளைக் கண்டுள்ளது. இவற்றிற்கெல்லாம் முகம்கொடுத்து பழக்கப்பட்டு மீண்டும் இயல்பு வாழ்வினை அரச இயந்திரங்களின் துணையின்றி ஆரம்பிக்க அந்த வல்லமையை எமக்குத் தந்த அரசிற்கு நாம் ஒருவகையில் நன்றிக் கடன் பட்டவர்களே.

தற்பொழுது தமிழ் மக்களிடம் எழும் சந்தேகமும் கேள்வியும், இனிவரும் காலங்களில் நாம் சிறிலங்கா அரசின் நிவாரணங்களையும் புதிய கட்டுமானப் பணிகளையும் நம்பியிருக்காது நம்மை நாமே புலம்பெயர்ந்த எமது உறவுகளின் உதவியுடன் மீளக்கட்டியெழுப்ப ஆயத்தமாக வேண்டுமா? அன்றி சிறிலங்கா அரசை நம்பி மோசம் போவதா? என்பதே.

ஆரோக்கியமான அறிகுறி.

உதவி வழங்கும் பணக்கார நாடுகள் தமது “சுனாமி” உதவிகளைத் தமிழ் பேசும் மக்களிற்கும் உரிய விதத்தில் சென்றடைய வேண்டுமென சிறிலங்கா அரசுக்கு நிர்பந்தங்களையும், நிபந்தனைகளையும் வேண்டுகோளாக்கி கொண்டிருக்கின்றன எனப் பத்திரிகைகள் வாயிலாக அறிகின்றோம். இது ஓர் ஆரோக்கியமான அறிகுறி. பின்னணி எதுவாக இருந்தாலும் போர்ககால அனர்த்தங்களுக்கு நடந்த இருட்டடிப்பு போலல்லாது, உலகளாவிய ரீதியில் ஒரு கண்காணிப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

ஆண்டாண்டு காலமாக பேரினவாத அரசுகளுடன் பல உடன்படிக்கைகளைச் செய்வதும் பின் அவை செயலிழப்பதும் சர்வசாதாரணமான நிகழ்வுகளே “நம்ப நட நம்பிநடவாதே ” என்பது முதுமொழி. எனவே, நாம் பட்டறிந்த அனுபவங்கள் மூலம் இத்தடவையும் சிறிலங்கா அரசு எம்மை ஏமாற்றாமல் கண்காணிப்பது

மனங்கொள்ளப்பட வேண்டும். ஏனெனில், சிறிலங்கா அரசு வழமைபோல் அரைகுறை நிவாரணங்களை வழங்கிவிட்டு நீண்டதொரு பட்டியலை உலகிற்கு காட்டவும் முனையலாம்.

எது எவ்வாறாயினும் விடுதலைப்புலிகளுடன் ஏற்படுத்தப்பட்டுள்ள “சுனாமி நிவாரணத்திற்கான உத்தேசக் கட்டமைப்பு” தமிழ் பேசும் மக்களின் திருப்திக்கு ஏற்ப நடை முறைப்படுத்தப்படுமாயின் அது சிறிலங்கா அரசின் மீதான தமிழ் மக்களின் நம்பிக்கையில் மீண்டும் ஓர் ஒளிக்கீற்றாகவும் அமையலாம். இதுவே நாட்டின் புரையோடிப்போன இனப்பிரச்சினையின் தீர்வுக்கான அடித்தளமாகவும் ஆகலாம். இது ஆகவேண்டுமென மீண்டுமொரு நம்பிக்கையுன் எதிர்பார்ப்போமாக.